

அமரர்

# சிவசுப்பிரமணியம் சிவசோதி

அவர்களின்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



அமரர்

# திருமதி.சிவசுப்பிரமணியம் சிவசோதி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# 31ம் நாள் நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அன்பின் உறைவிடமே

பாசத்தின் தெய்வமே

கண்ணாய் வளர்த்திட

அறிவுக் கதிரே – கண்ணீர்துளிகளை

கவிதாசாரம் செய்கிறோம்

உன்பாதம் பணிந்து.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*

*திருச்சிற்றம்பலம்*



## காப்பு

சீரும் திருவும் பொழியும்
கடம்ப மர நிழலோன் ஊராம்
மாதகல் கிழக்கில் மாண்புடன்
உதித்திட்ட சிவசோதி என்னும்
மன்னவள் வாழ்வின்
பயணம் பதிவை தந்திட
வினாயகனே என்றும் துணைநிற்க.

### விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானே
காதலால் கூப்புவர் தம்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுணைசை முருகன் துதி.

மறக்க மனம் வருமோ நுணசை பதியை
மறந்த பின் வாழ்வுமுண்டோ
சிறக்கும் அழகெங் கெங்கே சேரும் அங்கேளெல்லாம்

சிவகுமாரன் கோலம் அக் காட்சி கண்டு
கந்தன் கடம்பமரம் சூழ்
மறக்க மனம் வருமோ துணசைப் பதியை
மறந்த பின் வாழ்வுமுண்டோ

சப்த கன்னிகள் குன்றாக தரிசனம்
சக்திவேல் குன்றினில் ஆடும் தரிசனம்
கந்தகடம்ப மலர் காட்சி தரும் தரிசனத்தை
கண்டு மறக்க மனம் வருமோ அழகனை
மறந்த பின் வாழ்வுமுண்டோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை வரலாற்றிலே...

அழகு வானும் அற்புத நீள் கடலும் கலையும் கற்பகவளமும் நிறைந்த மாதகல் கிழக்கில் வாழ்ந்தவர்கள். இராமுப்பிள்ளை இராசம்மா குடும்பம் அவர்கள் மூத்த மகளாய் ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி ஏழு சித்திரை பத்தில் பிறந்தார். சிவசோதி என்னும் அழகிய மகள்.

குடும்பத்தில் பிறந்த முதல் பிள்ளை என்பதால் கண்ணின் இமையாக வளர்த்து வந்தார். அழகிய நிமிர்வுடன் கல்வியும் கற்று இளமையில் துள்ளிடும் மானாய் வாழும் நாளில் நாகேஸ்வரி வீரசிங்கம் (அமரர்) கந்தசாமி (அமரர்) குணமலர் (கிளி) வசந்தராணி (அமரர்) பரராஜசிங்கம் ஆகிய அறுவரை உடன்பிறப்பாக்கி மகிழ்வும் கண்டாள். ஊர்கூடி ஒன்றாக மகிந்திடும் வாழ்விலே சீருடனே வாழ்ந்தனர். மற்றவர் பழிக்கு உடனாகாது நல்லதையே செய்து நன்றாகவே வாழ்வோம் எனும் நோக்குடனே சுற்றோரும் மற்றோரும் போற்றிட மதிப்புடன் வாழ்ந்தனர்.

சிவசோதி என்னும் புகளுடையாள் இளமை வயதிலே இறைவன் பால் அதீத நம்பிக்கையும் தெய்வ வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டவர் இரக்க குணமும் மற்றோருக்கு தன்னை உதவி செய்வதிலும் முன்னிப்பவர்.

நுணசை முருகனே துணையென்று அவன் காலடியில் இருந்த நாள்தான் அதிகம். இவர் தன் ஆரம்ப கல்வியை மாதகல் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் தொடர்ந்தார். சின்னவயதிலே தந்தை தாயிற்கு உதவியால் வேலைகள் செய்வார். குடும்பத்தின் மூத்தவள் அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுப்பொறுப்புடனே இனிதாய் சுமைகளையும் தாங்கியவர். காலச் சுழற்சியில் மங்கையெனும் பருவத்தை அடைய பலரும் வாழ்த்திட ஆறுமுகம் மாணிக்கம் பெற்ற இணையற்ற புதுல்வனாம் சிவசுப்பிரமணியம் என்பவரை மணம்முடித்து மகிழ்வு கண்டனர் பெற்றோர். இனிதுடனே தொடர்ந்த இல்லற வாழ்வில் தவமாய்த்தவமிருந்து எதிர்பார்ப்புடனே ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஏழில் தவஈஸ்வரியை முத்தாகப் பெற்று வளர்த்து வரும் நாளில் அமரத்துவம் அடைந்து விட்டார். பின்னர் அறுபத்து ஒன்பதில் ஆசைக்கும் அன்புக்கும் இலக்கணமாய் புத்திரனை பெற்றெடுத்தார்கள். கடம்பேஸ்வரன் என்னும் அழகிய பெயரினை கந்தன் துணையுடன் சூட்டி மகிழ்ந்தனர். எழுபத்தொன்றில் வசந்தராணியும் எழுபத்து நான்கில் இராமகிஸ்ணனும் எழுபத்துஒன்பதில் சிவனேஸ்வரியையும் புத்திரராக பெற்று சீரும் சிறப்புடனே வளர்த்தனர்.

முத்து முத்தாக அறிவினை ஊட்டி பற்றுடனே வளர்த்து தரணியில் உயர்ந்திட்டார். மூத்தமகன் கடம்பேஸ்வரனிற்கு மாதகல் லோகேஸ்வரியை மணம்முடித்து தனேஸ், மதுஷா, குகமதி,ஆகிய பிள்ளைகளையும் கண்டு மகிழ அடுத்த மகள் வசந்தராணியும் மாதகல் ஊரின் ரவிந்திரகுமாரையும் ராமகிருஸ்ணன் தன்னூரிலே அமுதறஞ்சினியையும் கரம்பிடித்து வாழ்வின் பயணத்தை தொடர இளைய மகளிற்கு மணம் முடித்து பார்க்கும் ஆவலில் வன்னி நகரின் தச்சடம்பன் கிராமத்தை சேர்ந்த வாசுதேவனை நிச்சயித்து மணம்முடித்தும் வைத்தார். இல்லற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் பயனாக தேனுகா எனும் குட்டித் தேவதையும் மடியில் தவள அடைந்த ஆனந்தம் அளவில்லை. சிட்டுக்களாக சிறகடிக்கும் மழலைகளின் சிரிப்பில் திளைத்து பாசப்பிணைப்புடனே குடும்பத்துடன் வாழ்ந்தார். செய்ய வேண்டியதை தக்க பருவத்தில் கந்தன் துணையால் இனிதே நடத்தி முடித்தார். ஆயிரம் ஆயிரம் அறிவுரைகள் சொல்லி வாழ்ந்திட வழிகாட்டிய தெய்வம் கனவுகளுடனே எனிவரும் காலத்தை நோக்கியே இருந்த பொழுதுகளில் நோய் பற்றிக் கொண்டதனால் இரண்டாயிரத்து பத்தில் தை பதினாறில் துதியை நாளிலே விண்ணுலகம் சென்று கந்தன் காலடியில் சேந்தாரே.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுபம்



பிரதியாக்கமும் தொகுப்பும்
செல்வி.அனுஷா சிறிதரன்
பெறாமகள்
மாங்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர் புலம்பல் ...

மூத்த மகளாக முன்னின்று உழைத்த
ஆசையாய் வந்த அக்காவே
உங்களுடன் பாசமாய் வாழ்ந்த நாட்கள்
நெஞ்சை வாட்டுதே
ஆயிரம் பிறை காண முன்பு அழைத்ததனால் மயிலோன்
அன்புச் சகோதரர் மூவரிடம் சேர்ந்ததேனோ
தவியாய் தவிக்கிறோம் - அக்கா
மீண்டும் வருவாயோ உன்
முகம் தேடி நாங்கள்.

“ எண்ணங்களும் சிறப்பான சிந்தனைகளுமே
மனித வளத்தை மேம்படுத்தும்,,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் புலம்பல்...

அம்மா நினைத்திட முடியவில்லை
உங்களது பிரிவு
கண்ணுக்குள் மணியாகி
நெஞ்சுக்குள் நிலையாகி
எமைத் தாங்கி வளர்த்தீரே
எத்தனையோ துயர்பட்டும்
அத்தனையும் தாங்கினீர்
ஆறவில்லை மனம்
இன்னும் எத்தனையோ காலங்கள்
எம்மோடு இருப்பீர்கள்
என்று நினைத்தோம்.
முடியவில்லை அம்மா
அம்மா அம்மா
உங்களைப்போலொரு தெய்வம்
எம் வாழ்வில் எனி ஏதம்மா
துடிதுடித்து போகிறோம்
அம்மா என்று சொல்லிட யாருண்டு இங்கு
வேதனைகள் மாறவில்லை
உடைத்திட்ட குளம் போல
என் உள்ளம் நொந்து
ஓடுகிற கண்ணீரை என்ன செய்வோம்
ஆறாத நினைவால்
ஓலமிட்டு அழுகிறோம்
தப்பாமல் நீரெமக்கு
காட்சி தர வருவீரோ

“சிந்தனையில் இருந்து
பூத்துக் குங்கிய பூவொன்று வாடியதால்
எம்மனமெல்லாம் பாலைவனமாகியது
வெறுத்துப் போன பறவைகளாய்

சோகத்தில் வாடுகிறோம்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

தாயிற்கு தாயாகி
எமைத் தாங்கிய மாமியே
உங்கள் அன்பினால்
நாங்கள் மகிழ்ந்த நாட்களை
நினைத்துப்பார்த்து துடிக்கிறோம்
வாயாரப் பேசி அறிவுரைகள் தந்திடுவீர்
படைத்திட்ட இறைவன்
ஏன் பாவம் செய்தான்
பதறுகிறோம் இத்தரையில் நாங்கள்

# பேரப்பிள்ளைகள் புலம்பல்...

ஓயாது எங்களையே
அழைத்தபடி இருப்பீர்கள்
பல கதைகள் சொல்லி
அமுதூட்டி அன்பாய் வளர்த்தீர்கள்
அப்பம்மா, அம்மம்மா - என்று
எனியாரை அழைப்போம்
சின்னக்குழந்தைகள்
உங்களைத் தேடுகிறோம்
தேடுகிறோம் வாசல்வரை தேடுகிறோம்
எமைவிட்டு ஏன் போனீர்கள்
உங்கள் அன்புக்காய் ஏங்குகிறோம்.

"வாழ்ந்தவர்கள் எமைவிட்டுப் போனாலும்
விட்டுச் சென்ற அறிவுரையும் ஆதரவும்
எம் ஆன்மாவில் அழியாது
வளர்ச்சிக்கு ஒரு படி"

## தேற்றம்

"தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தில் - வேண்டா
நமக்குமது வழியே நாம்போமளவும் எமக்கென்ன என்று இட்டுண்டிருக்கும்.

வருவதை தாங்கி குமரன் திருவடி அடைந்த நாளை
பெருமையாய் மனதிலெண்ணி புலம்பலை
தவிர்த்துக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்

காப்பு
நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் -
கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்தர்சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா
அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி நூல்

நிலைமாண்டிய ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்

திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டிகுடிகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேன் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்

உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
எண்றெலை வைத்துன் இணையடிகாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணத்தொடை இரண்டும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்கா
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியம்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ஷதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் ளென்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்பையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஓட்டியப் பாவையும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாறகலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
எறிய விஷயங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்புமசுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவயொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் குடியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைக ள்நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறருக்கொண்டு
ஓதியே செவித்து உகந்துநீ றணிண
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டடாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழிவர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம்

ப்ரம முராரி ஸுரார்ச்சி லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவராச்சித லிங்கம்
காமதஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்திய ரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவண புஷ்ப ஸதார்சித லிங்கம்
பராம்பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தடிகள்

பத்தும் புகுந்து பிறந்து பளர்ந்து பட்டாடைச்சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடியாடி முடித்த பின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங்கணக்கறிறேன் அத்தனே கயிலாயத்தனே

வீடிருக்க தாய் இருக்க வேண்டுமனையால் இங்கிருக்க
பீடிருக்க ஊணிருக்க பிள்ளைகளும், தாமிருக்க
மாடிருக்க கன்றிருக்க நீ வைத்த பொருள் எல்லாம்
- இங்கிருக்க
உன் கூடிருக்க நீ போன கோலம் என்ன கோலமோ.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# கௌரிகாப்பு

*விநாயகர் துதி*

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சேர்வு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே
வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக்
காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
தாஉமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில்
மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயமாகும்

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம்

ஈடேறும்

நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்

நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே

இணைந்துவரும்

சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே

குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா

காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று

ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்

நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்

பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்

காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்

ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்

காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச்

செய்திடுவேன்

ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல்

கனன்றிடுவேன்

தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி

சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப்
போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீதேவி துர்க்கையம்மன் ஸ்தோத்திரம்

கற்பூர நாயகியே கனக வல்லி
காளி மகமாயி கருமாரி அம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமி அம்மா
பூவிருந்தவல்லி தெய்வயானை அம்மா
விற்கோல வேத வல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே!
(கற்பூர)

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேச்வரி
புரம் எரித்தோன் புறம் இருக்கும் பரமேச்வரி
நவ நவமாய் வடிவாகும் மாகேச்வரி
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேச்வரி
கவலைகளைத் தீர்த்திடும் காளீச்வரி
கார் இருளில் தீச்சுடரே ஜோதீச்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீச்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி!
(கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீ இருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவளின் குரல் கேட்டுஉன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு!
(கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் இரண்டும் உன் உருவே காண வேண்டும்
காலல் இரண்டும் உன் அடியே நாட வேண்டும்
பண் அமைக்கும் நா உனையே பாடவேண்டும்
பக்தியோடு கைஉனையே கூடவேண்டும்
எண்ணம் எல்லாம் உன் நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையது ஆகவேண்டும்
மண் அளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளையும் தீரும் அம்மா!
(கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சில் உன் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன் நாமம் வாழவேண்டும்
சுற்றம் எல்லாம் நீடுழி வாழவேண்டும்
ஜோதியிலே நீ இருந்து ஆள வேண்டும்
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா?
(கற்பூர)

அன்னைக்கு உபகாரம் செய்வதுண்டோ?
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமை இன்றிக் காவல் உண்டோ?
கன்றுக்குப் பசுவன்றிச் சொந்தம் உண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணைக்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நான் உன்றன் பிள்ளையன்றோ?
(கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கே நான் அடிமை ஆக வேண்டும்
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சகத்தை என் நெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான் என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவை எல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும்
(கற்பூர)

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்தனில் சக்தி இல்லை
நடந்திடவோ கால் இரண்டில் ஆகவில்லை
செம்பளவாய் வாய் அழகி உன் எழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவும் இல்லை
(கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னைப்
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை!
(கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வரும் நாமம் சொல்லி குங்குமத்தினால் அர்ச்சிக்கவும்.

## லக்ஷ்மி அர்ச்சனை

01. ஓம் ப்ரகித்யை நம:
02. ஓம் விக்ருத்யை நம:
03. ஓம் வித்யாயை நம:
04. ஓம் ஸர்வயுபூத ஹிதப்ரதாயை நம:
05. ஓம் ஸ்ரத்தாயை நம:
06. ஓம் விபூத்யை நம:
07. ஓம் ஸீரபடஷீபை நம:
08. ஓம் பரமாத்மிகாயை நம:
09. ஓம் வாசே நம:
10. பத்மாலயாயை நம:
11. பத்மாயை நம:
12. ஓம் ஸீஸயே நம:
13. ஓம் ஸ்வாஹாயே நம:
14. ஓம் ஸ்வதாயை நம:
15. ஓம் தன்யாயை நம:
16. ஹிரண்மய்யை நம:
17. ஓம் லெட்சுயை நம:
18. ஓம் நித்ய புஷ்டாயை நம:
19. விபாவர்யை நம:
20. ஓம் அதித்யை நம:
21. ஓம் தித்யை நம:
22. ஓம் தப்தாயை நம:
23. ஓம் வஸீதாயை நம:
24. ஓம் வஸீதாரிண்யை நம:
25. ஓம் கமலாயை நம:
26. ஓம் காந்தாயை நம:
27. ஓம் காமாட்சியை நம:
28. ஓம் க்ஷீரோத சம்பவாயை நம:
29. ஓம் அனுக்ரககப்ரதாயை நம:
30. ஓம் புத்தயே நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. ஓம் அநகாயை நம:
32. ஓம் ஹரி வல்லபாயை நம:
33. ஓம் அசோகாயை நம:
34. ஓம் அமிர்தாயை நம:
35. ஓம் த்ரிலோக விநாசின்யை நம:
36. ஓம் ப்ரம்மா விஷ்ணு சிவாத்மிகாயை நம:

ஓம் ம ஹலக்ஷ்ம்யை வித்மஹே
விஷ்ணு பத்தின்யை தீமஹி தந்நோ
லக்ஷ்மிப்ரசோதயாத்

## சுமங்கலிப்பிரார்த்தனை

இதைப் படித்து துதிப்பதால் சகல கஷ்டங்களும் நீங்கி சர்வகாரியசித்தியும், சர்வமங்களங்களும் , தீர்க்க சுமங்கலியான வாழ்வும் கிட்டும்

01. ஓங்கார பூர்வீக தேவி
வீணாபுஸ்தக தாரிணி
வேத மாதா நமஸ்துப்யம் அவைதவ்யம் ப்ரயச்சமே
பதிவ்ரதே, மஹாபாகே பர்துஸ் ப்ரியவாதினி
அவைதவ்யம்ஸ சௌபாக்யம் தேஹி
த்வம் மமபுத்திரான், பௌத்ராம், ஸ சௌக்யம் ஸ
சௌ மாங்கல்யம் ஸ தேஹி மே.


02. மங்களே மங்களாதாரே மாங்கல்ய
மங்களப்ரதே, மங்களார்த்தம் மங்களேசி
மாங்கல்யம் தேஹிமே சதா.

### பயனற்ற ஏழு

ஆபத்துக்கு உதவாப்பிள்ளை
அரும்பசிக்கு உதவா அன்னம்
தாகத்தைத் தீராத் தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாவத்தைத் தீராத் தீர்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

நிகழும் விரோதி வருடம் தை மாதத்து சனிக்கிழமை 16ம் நாள் இறைபதம் எய்திந எமது அன்புத்தெய்வம் அமரர் சிவசுப்பிரமணியம் சிவசோதி அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் உள்ளுரிலும் வெளிநாடுகளில் இருந்தும் தொடர்பு கொண்டும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இன்று 15.02.2010 அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபீண்டிகரண கிரியைகளலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெற்ற மதிய போசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்ம் இந்நூலை அச்சிட உதவிய கஜனி பதிப்பகத்தினருக்கும் எம் மனப்பூர்வமான நன்றிகளை நவில்கின்றோம்.

~ *நன்றி*

**இங்ஙனம்**
**பிள்ளைகள், சகோதரர்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**மற்றும் உறவினர்கள்**



**மாதகல் கிழக்கு**
**மாதகல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணினி

வடிவமைப்புடன்

அச்சுப்பதிப்பு

# கஜனி அச்சகம்

2ம் குறுக்குத்தெரு, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.



"இந்தமாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்."
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

கஜனி அச்சகம், 8ம் குறுக்குத்தெரு, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org